
# நதியில்லா ஓடம்



கனகசூரியம் யோகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நதியில்லா ஓடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

**உண்மை என்றும் உயிர்பெறும்** (கவிதைகள்)
தேசிய சாஹித்திய விருது பெற்ற நூல்
மணிமேகலைப் பிரசுரம்-2005.

**மழலைக்கோர் பாட்டு.** (சிறுவர் பாடல்)
நர்த்தனா வெளியீட்டகம்-2006

**என் மனவானில்** (கவிதைகள்)
நர்த்தனா வெளியீட்டகம்-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியில்லா ஓடம்

கவிதைகள்

கனகசூரியம் யோகானந்தன்

**நர்த்தனா வெளியீட்டகம்**
இல 101/ 8, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியில்லா ஓடம்
©கனகசூரியம் யோகானந்தன்

முதற் பதிப்பு - 2018

அட்டைப்பட ம் நூல் வடிவமைப்பு
மேமன்கவி

வெளியீடு
**நர்த்தனா வெளியீட்டகம்**
இல 101/ 8, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

**Nathiyilla Odam (Poems)**
**©Kanagasooriyam Yogananthan**

**First Edition 2018**

**ISBN: 978 -855 – 0328 – 01 - 7**

***Book & Cover Designed by***
**Memonkavi**

***Published by***
***Narthanana Publidhers,***
***No, 101*/8, Kandasamy Kovil Road,**
**Tricomalee.**

**Printed by**
**Millennium Graphics (Pvt)Ltd.**
**No.30/7, 5th Lane,**
**Ambagahapura,**
**Maharagama.**
**Tel. 011 216089, 0777 395057**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்!

தீச்சொற்கள் எழுதி
தீயை அணைத்து கொண்ட
கவிஞர் தம்பி தில்லை முகிலனுக்கு
இது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியில்லா இடம்

First Edition 2010

ISBN: 978-955-0328-01-7

*Book & Cover Designed by*
Menaakavi

*Published by*
*Narthanana Publishers,*
*No. 101/8, Kannasamy Kovil Road,*
*Trincomalee.*

Printed by
Millennium Graphics (Pvt) Ltd
No.30/7, 5th Lane,
Ambagahajuma,
Maharagama
Tel: 011 2250089, 0777 395057

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைக்கனம் இல்லாத கவிஞர்

-நந்தினி சேவியர்

க.யோகானந்தன் எனும் ஒரு கவிஞன். ஆண்டு நினைவில் இல்லை. 1994 ஆம் ஆண்டாக இருக்கலாம். கல்வி அமைச்சில் ஒரு சிறுகைத பட்டறை. நான் அதில் சிறுகதை பற்றி பயிற்சி கொடுப்பவராக கலந்து கொண்டேன். அது முழுக்க முழுக்கப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான நிகழ்வு. சாம்பல்தீவு மகாவித்தியாலத்திலிலிருந்து ஆசிரியர் ஒருவர் சில மாணவ, மாணவிகளை அழைத்து வந்திருந்தார். மாணவர்களோடு ஆசிரியரும் மிக உன்னிப்பாக அந்தப் பட்டறையில் கலந்து கொண்டார். அவர்தான் க.யோகானந்தன்.

அதன் பிறகு பல மேடைகளில் இலக்கிய நிகழ்வுகளின் தொகுப்பாளராக அவரைக் கண்டிருக்கிறேன். கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்கள விழாக்களின் ஆஸ்த்தான தொகுப்பாளன் இவரே.

பின்னாட்களில் அவர் பாடசாலை அதிபராக எனக்கு அறிமுகமானார். இவர் ஒரு கவிஞர் என அப்போதெல்லாம் நான் அறிந்திருக்கவில்லை.

2006சமர்ப்பணம்!ல் சடுதியாக ஒரு நாள் கவிதைத் தொகுதிக்கான தேசிய சாகித்திய மண்டல விருதுக்குரியவராக இவரது பெயரை நான் கண்டேன். ஒரு புறமும் மகிழ்ச்சியும், மறுபுறம் வருத்தமும் ஏற்பட்டது.

அந்தக் கவிதை நூல் வெளியிடப்பட்டது கூட நான் அறிந்திருக்கவில்லை. உண்மையைச் சொல்கிறேன் அந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கிடைக்கவே இல்லை. ஏலவே மூன்று கவிதை நூல்கள அவரது நான்காவது கவிதை நூல் இது. ஆச்சரியமான விசயம் இதற்கு நான் அணிந்துரை எழுதுகிறேன்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற பேதம் எனக்குத் தெரியாது. எனக்கு தெரிந்தெல்லாம் கவிதை ஒன்றுதான். சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ.நுஃமான போன்றவர்களை புதுக்கவிதைக்காரர்களாக பல விமர்சகர்கள் கூறுகின்றனர். அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் கவிதைகளை அகவல் பா வகை என்றே சொன்னார்கள்.

சண்முகம் சிவலிங்கம் கூறுவார். **மரபை தெரிந்து மரபை உடைக்க வேண்டும்.**

தமிழகத்தின் பிரபலமான புதுக்கவிதையாஎர்கள் அனைவருமே மரபு தெரிந்த தமிழ் பேராசிரியர்களே. மீரா, புவியரசு , இன்குலாப், அப்துல் ரஹ்மான். அக்கினி புத்திரன் என இவ்வரிசை நீளும். அப்படி மரபு தெரிந்து மரபை உடைக்கும் ஒருவர்தான் க.யோகானந்தன்.

சமீபத்தில் ஒரு நடன நிகழ்ச்சியை பார்க்கக் கிடைத்தது. ஆண் ஒருவர் அழகாக அபிநயத்தார். பின்னணியாக ஒரு பாடல். **"திருமலை உறையும்........ கோணேசா..."** மெய்மறந்தேன். அப்பாடல் ஆசிரியர் க. யோகானந்தன். தலைக்கனம் பிடித்த எழுத்தாளர்கள் மத்தியில் அடக்கமான ஒருவர். எனக்குப் பிடித்தமானவர். எனது நூல் வெளியீட்டின் முக்கிய பேச்சாளராக நான் அழைத்திருந்தவர்.

இனி நூலுக்கு வருகிறேன்.

நீட்டி வளர்க்காமல் பதச் சோறாக சில...

*நவமணிகளாய்*

*பிணைக்கப்பட்டவைகளாய்*
*அடையாளம் தெரியாமல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கிப்போன
எலும்புக்கூடுகள்-
ஆய்வாளர்களின் கைவிரல்களில்
எப்போது புதைந்தார்கள்
ஏன் புதைந்து போனார்கள்
என்பவை வினாக்குறிகளாய்
விடை தெரியாமல்
கண் முன்னே விரிந்திருக்கும்
(மண்ணறைகளில்)

ஆடைகளை மாற்றுவது போல
பற்பல முகங்களையும்
கண்டு பிடித்து விட்டேன்.
வீட்டிலுள்ள போது தெரியும் முகம்
கதிரையில் இருக்கும் வரை
காட்டிச் சிரிக்கும் முகம்
தெருவிலே கண்டு கதைக்கும் முகம்
(முன்னொரு காலம்)

புதுமைகளின் மார்புகளிலிருந்து
நஞ்சு வடிகிறது
இறைச்சிக் கடைகளில்
தொங்கும் கொழுக்கிகளில்
இரத்தம் உறையாத
மனித இதயங்கள்
தொங்கி அசைகின்றன.
பிணங்களைச் சுவைத்து
எச்சில் வடியும் நாக்களில்
பூமி மட்டும் புதைந்து போயுள்ளது.
(மனிதன் பூப்பான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கத் துடிக்கும்
வெறும் மானுடப் பிண்டங்கள்
வயிற்றுப் பிழைப்பிற்காய்
போராடிப் போராடி(த்)
தோற்றுப் போய்
தேயிலை செடிகளுக்காய்
உரமாகிப் போகும்.
(மலையகம்)

போர் மேகங்கள் சூழ்ந்த
யுத்த பூமியெங்கும்
பரந்து பாய்ந்தோடும்
நீர் வெள்ளம் எங்கும்
கொட்டில் - கூடாரங்களென
நிறைந்து நிற்கும்.
மானுடக் கூட்டங்கள்
துப்பாக்கி பிடித்த கைகள்
நேசமாய் கரங்கள் நீட்டும்.
(நேசக்கரங்கள்)

அவர் தொடர்ந்து எழுதி கவிதைக்கு வளம் சேர்க்க வேண்டும. சேர்ப்பார்.....நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை ஏற்படுத்தும் கவிஞர்

-மேமன்கவி

நண்பர் க.யோகானந்தனின் கவிதைப் பிரதிகளை ஒன்று சேர மீண்டும் ஒரு தடவை நதியில்லா ஓடம் என்னும் தொகுப்பு மூலம் வாசிக்க கிடைத்திருக்கிறது. அவரது கவிதைகளை அங்கங்கே வாசித்த பொழுது கிடைக்காத அனுபவம் ஒரு சேர வாசித்தபொழுது கிடைத்தது.

ஒவ்வொரு படைப்பாளியினதும் படைப்பு ஏதோவொரு அனுபவத்தையோ குரலையோ கொண்டதாக இருக்கும்.

யோகானந்தனின் கவிதைகளின் உருவத்தைப் பொறுத்தவரை அவருக்குரிய பாணியில் தனக்கான கவிதைப் பிரதிகளை எழுதிச் சென்று இருக்கிறார். இந்தத் தனித்துவப் பாணி என்பது நவீன கவிதை உருவத்தைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாத ஒன்றாகவும் தேவையாகவும் இருக்கிறது.

ஒவ்வொரு படைப்பாளியும் தன்னிலை சார்ந்தும் அவர் சார்ந்த சமூகம் சார்ந்ததுமான அனுபவங்கள் அவை சார்ந்த உணர்ச்சிகள், உணர்வுகளைப் பதிவு செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

உலகத் தமிழ் சமூகத்தின் அனுபவங்கள் பிரச்சினைகள் என்பது கடந்த நூற்றாண்டுகளில் அனுபவங்களில் இருந்து வேறுபட்டு இருக்கின்றன. பொதுவானவையாக இருப்பினும், வேறுபாடுகள் என்பது அந்தந்தப் படைப்பாளிகளின் எடுத்துரைப்பு நிர்ணயக்கின்றது. இந்த எடுத்துரைப்பு முறைமை என்பது ஆளுமையாலும் திறனாலும் மாறுபடுகிறது.

இங்கு நாம் குறிப்பிடும் யோகானந்தனின் கவிதைகள் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது அவரது கவிதையின் உள்ளடக்கம் சார்ந்தாக இருக்க, அந்த அனுபவங்களை வித்தியாசமான எடுத்துரைப்பு மூலம் முன் வைக்கும் எத்தனிப்புகளாக இருக்கின்றன.

நண்பர் யோகானந்தனின் கவிதைகளைப் பொறுத்தவரை அவரது உள்ளடக்கத்தின் உள் குரலாக இருப்பது என்னவென்றால், கடந்த காலங்களில் சிறப்புகளாக இருந்தவைகளை இழந்து நிற்கும் ஏக்கமும் அவற்றை மீளப் பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவருடைய பெரும்பாலான கவிதைகளில் இருப்பதைக் காணலாம். இவற்றில் மனிதர்களும் அடங்குவார்கள். இந்த ஏக்கமும் எதிர்பார்ப்பும் உலகளாவிய மனித குலத்தின் ஏக்கமாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. அதனால்தான் அதுவே உலகளாவிய பிரதிகளின் நவீனக் கவிதையை ஒரு நேர்கோட்டில் சந்திக்க வைக்கிறது. நண்பர் யோகானந்தனின் கவிதை எத்தனிப்புகளில் இந்த உலகளாவிய தன்மை வெளிப்பட்டு அவரை இன்றைய கவிஞராக ஆக்கி இருக்கிறது..

கவிதை எத்தனிப்புகள் என்று சொல்வது வித்தியாசமான முறையில் தன் அனுபவங்களை முன் வைக்கும் முயற்சி என்பது தான். உதாரணத்திற்கு மழைக்காலத்தைப் பற்றிப் பேசும் கவிதையில் இறுதியாக அம்மா மழை நீரைச் சேமிக்கும் செயலைப் பற்றிப் பேச வரும் பொழுது

**ஒழுகும் கூரை நீரைப் பக்குவமாய்**
**எனது தாய்**
**பாத்திரங்களில்**
**வாங்கிக்கொண்டிருந்தாள்..**

அதாவது சேமித்துக் கொண்டிருந்தாள். என்பதை வாங்கிக் கொண்டிருந்தாள். என்று முடித்திருப்பது சிறப்பாக இருக்கிறது. வாங்கிக் கொண்டிருந்தாள். என்ற சொல்லாடலுடன் முடித்திருப்பது மூலம் அக்கவிதை முடிந்த பின்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்தக் கவிதையைத் தனது கவிதையாக வளர்த்துக் கொள்வதற்கான இடத்தைத் வாசகர்களுக்கு தருகிறது.

அதைப் போல் அதே கவிதையில் மழையின் அழகை ரசித்துக் கொண்டிருக்கும் பொழுது

**என் தலைக்கு மேலே**
**காற்றில் உதிரும் சருகுகளாய்**
**துப்பாக்கியிலிருந்து பிறக்கும்**
**இரும்பு சன்னங்களாய்..**
**மழைத்துளிகள்**
**சிந்திச் சிதறுகின்றன.**

என்றதாய்க் கடந்து போன போர்ச்சூழல் வாழ்வியல் சார்ந்த உருவகம் எட்டிப் பார்ப்பது. என்பது நமது அழகியல் ரசனை சார்ந்த நமது மனோநிலையைக் காட்டுகிறது.

இவ்வாறாக நண்பர் யோகானந்தனின் இத்தொகுதியில் அமைந்துள்ள பல கவிதைகளில் அத்தகைய தெறிப்புகள் இருப்பதைக் காணலாம். அத்தகைய கவிதைகளைப் பற்றி விரிவாகப் பேசலாம். விரிவஞ்சி அப்பணியினை வாசகர்களிடமே விட்டு விடுகிறேன்..

இத்தகைய தெறிப்புகள் நிறைந்த கவிதைகள் பலவற்றை நண்பர் யோகானந்தன் தரவேண்டும். அப்படி அவர் தருவார் என்ற நம்பிக்கையை நதியில்லா இடம் எனும் இத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகள் ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு...

-கனகசூரியம் யோகானந்தன்

**வா**னத்தை நோக்கி என் கவிதைச் சிறகினை அகவை ஒன்பதில் பின்னர் விரித்திருக்கிறேன். கவிஞன் என்பவன் சிலர் சிரிக்கும் போது தானும் சிரிப்பவன் ஆகவும், அழுகின்ற வேளை அழுகின்றவானுமாகின்றான்.

இதய ரணங்களை மயிலிறகால் வருடுவது போல் என் கவிதைகள் அமைந்துள்ளன. பிரசவ வேதனைகளுக்கு மத்தியில் என்னுடைய நான்காவது கவிதை நூல் பிரசவம் நடந்தேறியுள்ளது.

இன்று உங்கள் முன்னால் என் கவிதைகளை அச்சு வாகனம் ஏற்றி வீதியில் உலா விட்டிருக்கிறேன். எண்ணங்களில் பிறப்பெடுத்தவையும், அனுபவ பட்டறிவும் பாடுபொருளாய் அமைந்துள்ளன. போர்க்கால நினைவுகளை முடிந்தவரை மனித அவலங்களை சொல்லியிருக்கிறேன். இக்கவிதைகள் அவலங்களில் பிறப்பெடுத்தாலும், மகிழ்ச்சியில் திளைத்து போனவை.

என்னில் முளைத்த அவலங்களை நீண்டகாலமாக தாங்கிப்பிடித்தபடி வாழ்ந்திருக்கிறேன். கவிதைப் பொருள் விளங்குமாப் போல் என் கவிதைகள் எளிமை கொண்டவையாக அமைந்துள்ளன. கவிதை தொகுப்பை மீண்டும் உயிர்ப்பிக்க பல வருடங்கள் தவமாய்த் தவம் இருந்தேன். காலக்கனி பறிக்க பொறுமையோடிருந்தேன்.

எழுத நினைத்தாலும் ரணங்கள் என் முயற்சிகளுக்கு பெரிதும் தடை போட்டன. மொழி இறுக்க இடுக்குகளில் சிக்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிக்காமல், சுதந்திரமாக சொற்களை நடமாட வைத்துள்ளேன். அந்த வகையில் எனது நான்காவது கவிதை நூலாக நதியில்லா ஓடத்தை நகர்த்தியிருக்கிறேன்.

இம்முயற்சிற்கு தோள் கொடுத்து, இந்த நூலை அழகிய முறையில் வடிவமைத்து தந்த, மேமன்கவி அவர்களுக்கும், இந்த நூலுக்கு அழகியதொரு அணிந்துரையை கொடுத்து உதவிய நாடறிந்த எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்களுக்கும், நூலாசிரியர் அறிமுகத்தை சீராய் அமைத்துத் தந்த வைத்திய கலாநிதி அ.ஸதீஸ் குமார் அவர்களுக்கும், மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இக்கவிதை நூல் சிறப்பாக வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இதுவரை காலமும் எனது கவிதை முயற்சிக்கு கைகோர்த்து நின்ற வாசகப் பெருமக்களுக்கும், நன்றி கூறுவதோடு தரமான விமர்சனங்களை எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.......................

குருட்டு நாள்-17, மழலை-20, முன்னொரு காலம்-22,

மௌன இரவுகள்-24, வாழ்க்கை முட்கள்-25, புதைந்து போன

மானுடம்-28, மனிதன் பூப்பான்-29, கனவுகள்-30,

காலமுட்கள்-32, தாயக நினைவுகள்-33,

என்னைப் புதைத்து விடுங்கள்-35, இரவுகள்-37,

ஈரம் காயவில்லை-38, புதிய கூடுகள்-40,

புதுவைக் கவிஞன் நீ-42, விஷமழை-45,

நேசக்கரங்கள்-47, காத்திருப்பு-49, நிழல் வாகை மரம்-51,

தென்றலை முகர்ந்தபடி-52, முதுசங்கள்-54,

அன்பு மகனுக்கு-55, மண்ணும் நீரும்-58,

மரண பயம்-60, நதியில்லா ஓடம-62,

மாற்றம்-64, அந்திநேரம்-66, மலையகம்-68, கவிதை-70,

சுயம்வரம்-72, விடியல்-76, மாற்றம்-77, இனிய வதனம்-79,

தமிழ்மொழி-80, நட்பு-82, அதிசயம்-83, துயரங்கள்-85,

தாய்மை-87, மனப்பெட்டகம்-89, மரங்கள்-91

,மழைக்காலம-92, பண்டிகைகள்-94,

என் கண்கள் மட்டும-96, பிறப்பு-97, மண்ணறைகளில-99,

என்ன அதியசம்-101, எதிர்கால ஸ்ரீலங்கா-103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருட்டு நாள்

அனுமனின் தீயால்
வெந்து போன தேசம்
பகைமையினை
கொடிய தீக்கரங்களால்
வேதனைகள் ஓங்கி ஒலித்தன
அகவைகள் பல கடந்தாலும்
அவலங்கள் முழுமையாய்த் தீரவில்லை.

மயக்கம் தரும் மாலை
மானுட உறவுகளை
ஊமைகளாக்கின.
வக்கிரங்களின் கொடுமை
மண்விட்டு மக்களைத் துரத்தியது
அன்று மலர்ந்த குழந்தைகள்
மெய்மறந்த முதியவர்கள்
போக்கிடம் தெரியா பெண்மை
கண்ணில் பட்டதை தூக்கிக் கொண்டு
நிலம் பிரிந்த நாள்.

ஓடும் பாதையில்
குருதி மண்ணில் தெறிந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் மண்ணின் துளியின்
கருவறைகளை சிதைந்த
இரக்கமில்லா குருட்டு நாள்.
குருதியும் கண்ணீரும் வடிய
உயிரற்ற உடல்கள்
உறவுகளெல்லாம் சிதறிய நாள்.
பறவைகள் கூடுபோகும் நேரம்
மின்னல் இல்லாமலே
இடியோசைகள் -
அக்கினிப் பூக்களெல்லாம்
பல்குழல் பாம்புகள்
துப்பித் தீர்த்தன.

வானமில்லா ஊர் தேடும்
கோழிக் குஞ்சுகளாய்
அப்பாவி மாந்தர்கள்
மாவட்டம் விட்டு மாவட்டம்
தேடிச் சென்ற நாள்.
பிணக் கல்லறைகளையும்
இடுகாடுகளையும்
வாழ்விடமாக்கிய கொடிய நாள்.
அரிசியும் பருப்பும் பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசை வரிசையாய்
கையேந்தி நின்ற நாள்
கழிவறைகள் இன்றியே
கவலையாய்
கழிந்து போன நாள்.

ஆறுதலாக நேசக்கரம் நீட்டிய
மனித நேயங்களை
காட்டிச் சென்ற நாள்.
இளைப்பாற மீண்டும்
தாய்மண் கிடைத்த போதும்
நினைவுகளை நெஞ்சம்
மறக்காத நாள்.

2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலை

இரவின் சுகக் கதைகள்
இதயத்தில் பிறக்கும்
உறவில் பூக்கும் பூ
உதிரத்தில் உள்ளசையும்
மழலைப் பிஞ்சு
இறைவனின் மழலைவரம்
பருவக் காட்டில்
சட்டென விரியும்
பருவப் பூக்கள்.

இளமையின் அசைவுகளால்
இடப்பட்ட விந்துக்களின்
அறுவடை நாற்றுக்கள்
பனிக்குளிரின்
பூத்துக் குலுங்கும்
உயிர் குறும்பு காட்டும்
குழந்தைச் சிற்பம்
நெஞ்சு வீச்சின் புதையல்.

பருவ இடைவெளியில்
தேவதைகள் போடும்
ஆசைப்பூட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருவத்தில் ஏற்றிய தீபம்.
உருவங்கள்
இணைந்து செய்யும்
செல்வத்தின் அடையாளம்
சிற்றின்பம் பெற்றுத் தந்த
சிப்பியில் பிறந்த முத்து.

2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னொரு காலம்

முன்னொரு காலத்தில்
மனதால் சிரித்தார்கள்
கண்களில் வஞ்சனை தெரியவில்லை.
ஆனால் இன்றைய காலத்தில்
வாயைப் பிளந்தபடி
பற்களைக் காட்டிச் சிரிக்கிறார்கள்.
பற்கள் மாத்திரம் புன்னகைக்கின்றன
குளிரால் விறைத்த கண்களினால் - என்
நிழலைத் துருவித் தேடுகிறார்கள்.

பழைய காலம் ஒன்று இருந்தது
நெஞ்சங்கள் தாமே கைகுலுக்கும்
ஆனால் இன்றோ –
நெஞ்சம் சேராமல் கைகுலுக்குகிறார்
இடக்கையோ – என்
முதுகைத்தடவி குறிவைக்க
வலக்கையோ
போலிச் சம்பிரதாயங்களுக்களுக்காய்
மனம் ஒன்றுபடாமல் கைகுலுக்கிக் கொள்ளும்
ஆடைகளை மாற்றுவது போல
பற்பல முகங்களையும்
கண்டு பிடித்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலுள்ள போது தெரியும் முகம்
கதிரையில் இருக்கும் வரை
காட்டிச் சிரிக்கும் முகம்
தெருவிலே கண்டு கதைக்கும் முகம்
உதவி செய்ய வேண்டுமெனக் கருதி
ஒதுங்கிச் செல்லும் முகம்
புகைப்படத்திற்காய் காட்டும் புன்னகையாய்
அவ்வவ் முகங்களுக்காய்
புன்னகை புரிய பழகிவிட்டேன்
பேசிய வார்த்தைகளை
பிறர் சொல்லக் கேட்ட போதும்
மனதை அடக்கி போலியாய் (ச்)
சிரிக்கவும் தெரிந்து கொண்டேன்
போலி உலகிற்காய்
சிறப்பாக நடிக்கவும் கற்றுவிட்டேன்.

2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌன இரவுகள்

எங்கள் பூமியின்
வேர் கொண்ட மரங்கள்
கனிகளுக்குப் பதிலாக
யானைகளையே
பிரவசம் செய்கின்றன.
முகம் தெரியாதபடி –
மௌன இரவுகளை
கிழிந்துந் தொங்கவிட்டபடி
மனிதர்கள் யாசகர்களாய்
வீதியெங்கும் அலைகிறார்கள்.

முகம் காட்டி முழுநிலவு
சிரித்து குதூகலிக்கிறது
மனிதம் பலவீனப்பட்டுள்ளது
மிருகங்களுக்காய்
பயந்து போன வாழ்வு
பறவைகளின் நீட்சியாய்
விரிந்து போகின்றது.

2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை முட்கள்

வாழ்க்கை முட்களில்
விழுந்து குத்துண்டு
இரத்தம் சிந்துகின்றேன்
அருகிலிருந்து துடைத்தெடுக்க
யாரும் இங்கில்லை.

அந்தகாரப் பொழுதில்
வெளிச்சம் என்மேல்பட
உடல் முறுக்கேற
மனக் குழந்தை கண்ணீர் வடிக்கிறது.
ஆறுதல் பாலுக்காய்
இழந்த கைகளை நீட்டுகிறேன்.
தேசத்தின் நெருப்பிலே
குளிர்காய்ந்தபடியே
பலர் அங்கே குந்தியிருக்கிறார்கள்.
மென்மையான மெழுகில்
இதயக் கனவுகள் கரைகின்றன.
சுதந்திரக் காற்றைச்
சுமந்து செல்லும் மேகங்கள்
சோபை இழந்தபடியே
சோகத்தால் விம்முகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் நெற்றியில்
இலட்சியப் பொட்டிட
உதிர்ந்து போன மலர்களாய்
மானுடச் சருகுகள்
முடங்கிப் போய் கிடக்கின்றன.
வாழ்க்கை முட்களெல்லாம்
குருதி பொழிகின்றன.

மலையிடுக்குகளில்
மலர்ந்து நிற்கும்
தேயிலைச் செடிகள் கொண்ட
பனித் திவலைகள் சிந்தும்
மலையகம் செல்லும் வேளை-

செடிகளைத் துளாவும்
கண்ணீர் மழைத்துளிகள்
கண்கள் வரை வந்தே
காய்ந்து போகும்
நான் அதிகமாக
நட்புக் கொண்டவர்களெல்லாம்
இதயத்தை இறுக்கிப் பிடித்தபடி
மரணித்துப் போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதேவனின்
கணக்கெடுப்பிலே
செலவுக்கணக்களாய்
அவர்களின் உயிர்கள்
அதனால் – என்
பாதைகள் நெரிசலாகி
நீட்சியடைந்த பின்பு
தூரமாய் போகின்றன.

சரிந்து கிடக்கும்
மலைச்சாரல்களெல்லாம்
சாவுகளையும் -
சங்கதிகளாக்குகின்றன.

கிள்ளல்களில் அகப்படும்
தேயிலைக் கொழுந்துகளாய்
மனித உயிர்களும்
பறித்து முடிகின்றன.

**2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைந்து போன மானுடம்

இரவின் வேதனைகள்
அசையாத காயங்கள்
வதைபடு முகாம்களில்
கல்லாய்ப்போன துன்பங்கள்
குருதி மணக்கும் பூமியில்
புதைந்து போன மானுடம்
விழுதிலிருந்து விழும் விதைகளே
என் வழிகாட்டிப் பறவைகளே
குறுகிப்போன இதயத்தை மன்னியுங்கள்
நெருப்பைத் தொடுக்கிறேன்
தென்றலாய் நினைக்கின்றேன்
கரடுமுரடான பாதைப் பயணங்கள்
கண்ணுக்கெட்டும் தூரத்தே
விடியல் கண்முண்ணே தெரிகிறதே
பச்சையமற்ற உடற்குழந்தைகள்
பார்வையிழந்து போன பூமித்தாய்
நிட்சயமில்லாத வாழ்க்கை ஓடுபாதைகள்
இறுதிவரை வாழ்ந்திருப்போம்
உறுதியிலே நினைத்தவர்களாய்...

நன்றி -நீங்களும் எழுதலாம்-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் பூப்பான்

புதுமைகளின் மார்புகளிலிருந்து
நஞ்சு வடிகிறது
இறைச்சிக் கடைகளில்
தொங்கும் கொழுக்கிகளில்
இரத்தம் உறையாத
மனித இதயங்கள்
தொங்கி அசைகின்றன.
பிணங்களைச் சுவைத்து
எச்சில் வடியும் நாக்களில்
பூமி மட்டும் புதைந்து போயுள்ளது.
இரவும் - பகலுமாய் அவனுக்காய்
கண்கள் வடிக்கும் கண்ணீரில்
வான மண்டலம் மூழ்கிவிட்டது.
பெண்குறியும் கருவறையுமின்றி
சுயத்தில் வெளிப்படும் சுக்கிலம்
ஒரு மலரின் மேல் விழுகின்றது.
மலர்களே இனிமேல்
மனிதனைப் பிறப்பிக்கும்
மலர்களிலே மனிதன் பூப்பான்
நம்பிக்கை மட்டும் மாறாமல்
அவன் மௌனமாய்(க்)
கண்களை மூடுகின்றான்.

2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகள்

வெண்பனி மூட்டங்கள்
விரைந்தோடுகின்றன
நிரவிப் பரவும் குளிரிலே
மலை இடுக்குகள்
செய்வதறியாது திகைக்கின்றன.
பனித்துளிகளைத் தாங்கியபடியே
ரோஜா இதழ்கள் நனைகின்றன.
தனிமையை நினைகையில்
அர்த்தங்கள் முகிழ்கின்றன.
விரவிப்படரும் கருமையிலே
இனிய மாலை மறைகிறது.
கண்ணீர் மழையில்
தினம் தினம் குளிந்து
விறைத்துப் போன
இதயங்களாய்
என் நினைவுகள்
மண்டைக் குழியிருந்தவாறே
மரம் கொத்தியாய்
குடைத்தெடுக்கின்றது
விடியலைத் தேடியபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கிலே
மாண்டுபோன
விட்டில் பூச்சிகளாய்
மலருமுன்னே –
நினைவுகள் கருகுகின்றன
பாவம் சொல்லி (ப்)
பரிணாமம் கொள்ள
உடலற்ற முண்டங்களாய்
மனித வாழ்வு
சிதைந்து போகிறது.

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமுட்கள்

விஞ்ஞான வெளிச்சத்தில் உலகம்
தினம் தினம் விடிகிறது-அண்ட வெளியில்
மின்னல் கீற்றுக்களாய் மாற்றங்கள்
முகத்தை முகம் பார்த்துப் பேச்சுகள்
முடிவில்லாது தொடர்கின்றன
ஆய்வுக் குழாய்களில்
அன்பைப் பிறப்பிக்க முடியவில்லை.
மரபணுச் சோதனைகளும்
மருத்துவத் சாதனைகளும்
மாண்டுவிட்ட மனிதத்தை
உயிர்ப்பிக்கத் தெரியவில்லை.
எங்கள் அறிவையெல்லாம்
அவஸ்தைகளாக்கியபடியே
கால முட்கள் நகர்கின்றன.
கூட்டுப் புழுக்களாக்கியபடியே
வாழ்வு கழிந்து போகின்றது.
நெஞ்சுக் குழிருந்தபடியே
வார்த்தைகள் முடிந்து போகின்றன.
உழுத்துப் போன இதயங்கள்
தொங்கியபடியே பாசங்கள்
விஞ்ஞானச் சூட்டில் கூட
இதயம் கூட மாறவில்லை.

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயக நினைவுகள்

எங்கும் பனித்திவலைகள் சிந்த
இரவை பகலாக்கியபடியே
மானிட விழுதுகள்
பிரான்ஸ் தேசத்தில் ஊன்றுகின்றன.
விசித்திர பூமியை
நினைத்துப் பார்க்கையில்
சுக உலகின் ஆழத்தே நான்
தெளிவாய் எதையோ உணர்கிறேன்.
தாய் மண்ணிலிருந்து விரட்டப்பட்டோம்
சுற்றிச் சுற்றிச் சுழன்றபடியே
புகலிடம் தேடியே பிரிந்து வந்தோம்.
குளிர் காற்று
வந்து எழுப்பி விட்டது.
மொழி மாறி வந்து நின்ற போதும்
தமிழ் மணம் மாறாக்
குழந்தையாய் நாம்
பாலுக்காய் அழும் போதினிலே
தாய்த் தமிழ் பேசியபடியே நாம்
வெண்பனிப்படலம் பூமியை மூட
கம்பளிப் போர்வையில் மேனி நடுங்கினும்
நான் தமிழ் அழகை மறந்ததில்லை.

பள்ளிகள் தோறும்
தண்டமிழமுழக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைகள் தோறும்
கண்களின் தெறிப்பு

கூத்தும், பாட்டும் சங்கதி சொல்லும்
சிறுவர் பள்ளியில் பொதிகைத் தமிழாம்
வைகறை நிலவு வாசலில் விழுந்தது
இதயங்கள் ஊடே வழிந்து மறைந்தது
பன்னீர்ப் பூக்கள் மலர்ந்து மணந்தன
மேகக் கூட்டமோ மிதந்து சென்றது
நேசத் தமிழை நினைந்து வளர்ந்தது
மணிக்கூட்டு முட்களில் வாழ்வு கழிந்தது
தாயக நினைவுகள் கிளர்ந்து எழுந்தது.

பிரான்ஸ் தேசத்தில்வாசிக்கப்பட்டது-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் புதைத்து விடுங்கள்

நான் மாண்டு போனால்
என்னை –
கற்குடாக் கடலோரம்
புதைத்து விடுங்கள்.
தலையோ காலோ
எந்தப் பக்கம்
இருந்தாலும் சரி
மரபுகள் மாறாதபடி
மூடிய தரையில்
சிறுபுல்லாய் முளைத்திடவும்
சிறுக சிறுக வேர்பரப்பி
மண்ணின் துகள்களில் -
ஸ்பரிசம் செய்யவும்
ஒரு கைப்பிடி புழுதியாய்
உருகி –உருகி
மண்ணோடு கலந்து
கரைந்து
மறைவதும் போவதும்,

அழிந்து போன தேசத்தின்
புல்லின் நுனியில் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருண்டு புரளும் பனித்துளியாய்
ஒட்டி உறவாடினால் போதும்
நான் மீண்டும் ஒருதடவை
தீப்பறவையாகி
பிறப்பெடுத்து விடுவேன்.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுகள்

அன்று பிறந்த அணில் குஞ்சாய்
உடலை வளைத்து
முறுக்கேற்றிக் கொள்கிறேன்.
மெல்லிய பனித்துளிகள்
என் இதயத்தில்
மேலும கீழுமாய் உருள்கின்றன.
கடந்த இனிய இரவை
எத்தனை தடவைக் சொல்வது
எழுதி எழுதி பேனாக்கள் தீர்ந்தும்
இரவு மட்டும்-
மாறாததாய் நிலைத்திருக்கும்
இந்த இரவுகள்
எப்பொழுதும் பகல் பொழுதால்
வஞ்சிக்கப்பட்டவையே
விசுவாசத்தால் அழிக்கப்பட்டு
சுயமிழந்த இரவுகள்
கனவுகள் வந்து
திகில் கதைகள் பேசிய இரவுகள்
சோர்வடையவைத்து
முகாரி பாடிய இரவுகள்.

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரம் காயவில்லை

நேற்றுப் போல் இருக்கிறது
கண்களில் ஈரம் காயவில்லை.
படகில் ஏறிப் பயணித்தனர்
விழிப்பறவைகள்
மூதூர் நோக்கி
நிமிர்ந்தபடி விழித்திருந்தன.

மனித இறக்கைகளின்
மயிர்க்காம்புகள் தோறும்
செருகி வைக்கப்பட்ட
இதயக்கனதிகள்
ஒரு கணம் -
நாளைகளை நினைத்தபடி
கண்களை படரவிட்டன
வானமும் நன்றாய் வெளித்திருந்தது
அலைகள் அந்தரங்கத்தை
மறைத்தபடி எழுந்து போயின.
கடலலை
சூழ்நிலைக் கைதியாய்
படகின் சாளரங்கள் -
கடலலையை உள்வாங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குமுக்காடிப்போன
மனிதம்
படகு கவிழ்ந்தது
கரையைத் தொடாமலே
ஆழந்தேடியே அமைதியானது
விண்ணை உடைத்தெறியும்
அவலக் குரல்கள் யாவும்
மலையிடுக்குகளில்
மௌனித்துப் போயின
உறவுகளின் ஏக்கங்கள்
தொடர்ந்த வண்ணமாய்...

(1993ஆம் ஆண்டு மூதூர் நடந்த படகு விபத்தினி 25 வருட நினைவையிட்டு அவ்விபத்தில் இறந்தவர்களுக்காக எழுதப்பட்டது.-26.01.2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கூடுகள்

இந்தத் தாய் மண்ணின் மீது
கொள்ளை ஆசை –
எத்தனை பேரை இழந்து
விழுங்கிய போதும்
தன் அழகை மட்டும்
இன்னும் இழந்துவிடவில்லை –
தன்னைத் தேடிய மக்களுக்கு
உதிரத்தில் உணர்வையும் தந்தது.

தென்னையும், பனையும்
தலையிழந்து நின்ற போதும்
வாழ்வின் பிடிப்பை மட்டும் ஓட்டியது
நாணத்தால் பெண்கள்
தலை குனிந்ததையன்றி
தலைக்குனிவை இந்த மண்
ஒருபோதும் பார்த்ததில்லை.

காணாமல் பேனோர்
ஆயுள் முடிந்து போனாலும்
வரவை மட்டும் எதிர்பார்க்கும்
அகலிகைகளின் சாபம் தீரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை மனிதர்களே
உங்கள் எலும்புகள்
உடைக்கப்பட்டுத்தான்
புதிய கூடுகள் கட்டப்பட்டன.

அக்கினிக் குஞ்சுகளாய்
விரைவில் வாருங்கள்

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவைக் கவிஞன் நீ

உலகம் உன்னை
நினைத்தபடியே
கண்ணீர்ப் பூக்களை
தாரை வார்க்கின்றது.
களத்தில் நின்றபடி நீ
பூபாளம் பாடவில்லை
மாறாய் பரணி பாடினாய்
நாளையும் நம்பிக்கையையும்
பாட்டிலே பாடுபொருளாயின.
கவிதை வரிகளால் -
உடலுக்கு உஷ்ணம் ஏற்றினாய்.

உன் வாயில் வரும்
வெற்றிலை எச்சில் கூட
வெண்பாக்களை பிறப்பித்தன.
தீக்குச்சியாய் அணையாமல்
கவிதைப்பூக்கள்
எரிமலைகளாய்
வெடித்துச் சிதறிப் போயின.
பாரதி கட்டிய முண்டாசியில்லை
முழுமையாய் வெழுத்துப்போன
வெள்ளிக் கம்பிகளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையின் மயிர்ப் போர்வை
புலமையை நினைத்தாலே
புல்லரித்துப் போகின்றது.
அவனின் எழுத்துக்கள்
வெறும் புற்களையெல்லாம்
ஆயுதமாக்கின
பேனாக்களிலிருந்து
தீம்பிளம்பு வந்தது.

விடுதலைக் கவிஞர்களில்
அவன் மாத்திரம்
விசித்திரமானவன்
அவன் பிறப்பெடுத்தான்
என்பதை நம்பமுடியவில்லை.
மாறாக
காலம் மாத்திரம்
அவனை உருவாக்கித் தந்தது.
நிமிர்ந்த நடையும்
அஞ்சாத தன்மையும்
மக்களை
ஆராதிக்க வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கண்ட கனவு
சுருங்கிப் போனாலும்
ஒருநாள்
அவன் கவிதைகள்
வாழ்க்கை பெறும்
அன்று உலகம்
அவனைப் போற்றும்.

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷமழை

மழைக் குருவிகள்
அழிந்து போய்
நீண்ட காலம்.

வண்டுகளின் ரீங்கார ஒலி
மௌனித்துப் போனது
மழை மேங்கள் கலைந்தோடி
உஷ்ண சுவாலைகள்
காற்றலைகளில்
மிதந்து வரும்.

வானம் குளிருக்குப் பதிலாய்
வரட்சி மேளம் கொட்டும்
மழைப்பாட்டுப் பாடித்திரிந்த
தவளைகள் மரணித்து விட்டன.

கெட்ட பூச்சிகளை –
கொன்று குவித்து வாழ
தலையாட்டி ஓணான்களில்லை
விரும்பிய அமுதமழை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம்
விரட்டியடித்து விரட்டியடித்து
விஷ மழையே தருகிறது.

கடலின் ஓரத்திலிருந்து
வானம் பிளந்து போகும் சத்தம்
பிஞ்சுப் பசுக்கன்றுகள்
மாமரத்தின் வேர்களின் கீழ்
இடியின் அதிர்ச்சியில்
மௌனமாய் இறந்து கிடக்கும்.

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசக்கரங்கள்

கொட்டிந் தீர்க்கும்
மழைக்கால இரவுகள்
துப்பாக்கிகள் துப்பிய சன்னமாய்
உடலில் பட்டுத் தெறிக்கும்.
இருப்பிடங்களை விட்டு
அலறியடித்து ஓடும் மனிதர்கள்.

யுத்தம் தந்த எச்சங்களால்
உடைந்த அவயங்களை
தூக்கிப் பிடித்தபடி
நலன்புரி நிலையங்களில் நிறையும்.

மனிதப் பூச்சிக்கள்
சுனாமி தந்துபோன அவலம்
போதாத காலத்திற்கு
வெள்ளம் வந்து சிதைக்கும்.

எத்தனை ஆறுதல் உதவிகள்
மலையாய்க் கிடைத்தாலும்
இதய ரணங்கள்
என்றும் மாறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் மேகங்கள் சூழ்ந்த
யுத்த பூமியெங்கும்
பரந்து பாய்ந்தோடும்
நீர் வெள்ளம் எங்கும்
கொட்டில் - கூடாரங்களென
நிறைந்து நிற்கும்.

மானுடக் கூட்டங்கள்
துப்பாக்கி பிடித்த கைகள்
நேசமாய் கரங்கள் நீட்டும்.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பு

பொங்கி வந்த கவிதை
புதுமொட்டாய் (க்)
பூமரத்தின் அடியில்
இளமையிலே –
கருகிப் போனது.

இது புதுமை உலகம்
பக்குவப்பட்ட காற்றை
ஜன்னலுக்குள் வந்த நிலவை
தூரத்தே வைத்தே விரட்டிது.

இதயம் புதிய கால்முளைத்தே
அசிங்கத்தை துப்பித் தள்ளியது.

கழுகுப் பறவையாய்
சிறகுகள் வீரமாய்ச் சிலிர்க்க
மேகத்தை நோக்கியபடி
பறக்கத் தொடங்கியது.

காற்றில் மிதந்துவரும் நினைவுகள்
பெருமூச்சைப் பிரசவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டைக் கோதினை உடைத்தே
வெளிவரத் துடிக்கும் குஞ்சாய் -
காற்று வெளியிடையே –
காலந்திற்காய்க் காத்திருப்பு
புதிய மழைத் துளியாய்
நிலத்தில் காலூன்றும்.

**2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் வாகை மரம்

நிழல் தந்த வாகை மரமே
ஆரவாரமற்று அடங்கிப்போய்
ஊரின் அடையாளமாய்
மௌனப்பூ பூக்கிறாய்.
நேற்றைய நினைவுகள்
மெல்லிய மழைமேகமாய்
கலைந்து போகின்றது.

யாருமற்ற –
சூனியமாய்த் தெரியும் ஊரில்
எப்படி நான் மட்டும்
ஏகாந்த மிடுக்கோடு
தனியே வாழ்வது?
நாளை நாளை என்றபடி
நினைவிடுக்குகளில்
சிக்கித் தவிக்கின்றேன்.
உன்னை சுற்றியிருந்தே
கதைத்துப் பேசி கதைகேட்டு
குதூகலம் அடைந்த காலத்திற்காய்
காத்திருக்கிறேன்.

2006(இடப்பெயர்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்றலை முகர்ந்தபடி...

இந்த வில்லுக்குளம்
நான் சிறுபராயம் தொடக்கம்
வந்து கரையில் மகிழும் குளம்
இந்த இனிய நீர்
காதோரம் கதைகள் சொல்லும்
குந்தியபடி நினைவுகள் அசையும்
தென்றலை முகர்ந்தபடி
இளவெயிலில் இன்புற்ற இடம்.

கண்களால் பேசிய இடம்
மாலை வெயில் மயக்கம் தரும்
தென்னைகள் அசைந்து குடைபிடிக்கும்.
நினைவுத் தாமரைகள்
இதயமெல்லாம் பூக்கும்
நட்புக் கலந்த பரிகாச மொழிகள்
சில்லறைக் காசுகளாய்
சிதறித் தெறிக்கும்
நீர்க் காக்கைகளாய் நினைவுகள்
எட்டிப் பார்க்கும்
அதற்கிடையில் நீல இருள்
இன்னும் இன்னும்
ரகசியம் உரைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மிருட்டு கொலுவேறும்
துப்பாக்கிகள் துப்பிய காயமாய்
துயரம் கலந்த நினைவுகள்
மரக்கிளையின் பொருக்குகள்
பிணம் தேடும் கழுகுகளாய்
மரண நெடில்கள்
காற்றிலே கலந்து செல்லும்.

மரண பயம் நெஞ்சில் தொற்றும்
இன்பமாய் வாழ்ந்துமரணித்த
ஊர்வாசிகளின் நினைவுகள்
விழிநீராய் வியாபித்து நிற்கும்.

07.07.1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுசங்கள்

நினைவுப் பெட்டகத்தை
நரம்பு வழியால்
இழுத்துப் பார்க்கிறேன்
தெருவோர மரங்கள் உதிர்த்த
இலைகள் போல்
என்னுள் காய்ந்த நாளைகள
தந்த கனவுகள்
வயது முதிர்வின் நீட்சியில்
திக்குமுக்காடி வாழ்வு நகர
உப்புக் காற்றில் ஊறிப்போன
கோடை விழுங்கிய ஈரமாய்
வரண்ட முகத்தோடு
வீதியெங்கும் உலாவருகிறேன்.
குடும்பம் சேர்த்து வைத்த
முதுசங்கள் எல்லாம்
மறைந்து போயிருந்தன.
கல்லறையில் பட்டுத்தெறிக்கும்
அக்கினி நட்சத்திரத்தில்
அணில் குஞ்சொன்று
தந்தி இசைந்தபடி
ராகம் கூட்டிக் கொண்டிருந்தது.

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகனுக்கு

காலச் சுழற்சியில்
எத்தனை ரகசியங்கள்
மண்ணில் புதைக்கப்பட்டுவிட்டன.

நீ பிஞ்சுவாய் அசைத்து
பிறந்த போது உன் அன்னைக்கு
எத்தனை மகிழ்ச்சி
வானததில் பிறப்பெடுத்த நட்சத்திரங்களாய்
ஊனையும் உயிரையும்
கலந்து ஊட்டி மகிழ்ந்தோம்.

உனக்கு நினைவிருக்கிறதா?
உன்னை பள்ளியில் சேர்க்க
தரமான பாடசாலை தேடி
படி படியாய் ஏறினேன்
வைத்தியனாய் ஆக்கிவிட
பகலிரவாய் கனவு கண்டேன்

ஏழ்மைச் சுமைக்காய்
தோள்கொடுப்பாய் என எண்ணி
காரியமாற்றினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவும் நானும் முதுமையடைய
நீயோ பகலெல்லாம்
ஆழமாய்ச் அகலமாய்ச் சிந்தித்தாய்.

நாங்கள் உனக்குப் பாரமாய்
மாறிவிடுவோம் என்று
மூட்டைப் பூச்சிகளாய்
உன் நினைவுகளை
தட்டித் தட்டி எழுப்பினாய்.

வண்ண வண்ண
கனவு கண்ட எங்களை
அருவருப்பாய் நினைத்து
முதியோர் இல்லம்
அழைத்துச் சென்றாய்.

பலிபீடத்து ஆடுகளாய் நாம்
உன் பின்னால் வந்தோம்.

எம்மை சேர்த்து விட்டதும்
உன்கடன் தீர்ந்து விட்டது
நிம்மதியாய் பெருமூச்சு விடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மறப்பதற்காய்
பகலை கறுப்பாக்கிக் கொண்டோம்.

பெற்றெடுத்த பாவத்திற்காய்
உன ஞாபகங்கள்
எப்பொழுதும்
தூக்கத்தைக் கெடுக்கும்.

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணும் நீரும்

கண்களை மூடி துயிலும் போது
ஊர் நினைவுகள் -
சம்பந்தம் இல்லாமல்
மணிக்கூட்டு முட்களாய்
சூழன்று போகின்றது.

வீசும் தென்றலோடு
கைகோர்த்தபடி
தள்ளு வண்டியிலே
நடை சொல்லித்தந்த தாய் நிலமே –
என்மேனி முழுவதும்
புழுதி படியப்படிய
வியர்வை கலந்த ஊத்தையோடு
என் உடல் மணம் வீசிய போதும்
மீண்டும் புரள்வதற்காய் (க்)
காத்துக் கிடக்கின்றது.

நுங்கு வண்டி செய்து
அதை உருட்டி விளையாடி
பெய்த மழைநீரை தலையில் வாங்கி
நோய் தெரியாமல்
நல்ல சுகம் கண்டது தேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுக்குளத்தில் இறங்கி நீராடி
உடல் காயும் வரை
சுற்றித் திரிந்ததும்
மண்ணும் நீரும் சேர்ந்து
உதிரத்தில் ஓடுமானால்
அவை இன்று வரை
ஒட்டியிருப்பது உண்மை.

துவசம் செய்யப்பட்ட மண்ணோடு
நினைவுகளைச் சுமந்து
எரியூட்டப்படும் தேகத்தை
இப்பிறப்பில் முடித்துக் கொள்ள
இவை மட்டும் போதும் எனக்கு.

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண பயம்

தொலைந்து போன
நேற்றைய நாட்களை நினைத்து
கறுப்பு வெள்ளையாய்
கனவு காணும் முதுமை
படுக்கைகள் இருப்பிடமாய்
வாசல் படிகள்
சுருங்கிப் போன பயணமாய்
முடிந்து போன வாழ்க்கை.

துப்பாக்கிச் சன்னங்களாய்
திரும்பி வராத இளமைக்காலம்.
இதய வீணையை நரம்புகள்
மீட்டிப் பார்க்கும் போது
மனங்குரங்கு
அங்குமிங்கும் உலாவித்திரியும்.

இரவு தீர்ந்திடும் வரை
விழித்திருந்தபடி
திருவிழா பார்த்து
இன்புற்ற இரவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல மெல்ல
இனிய எத்தனையோ நினைவுகள்
மனத்திரையில் ஓடும்.

நேற்றைய நாட்களில்
பெற்றுக் கொண்ட அனுபவம்
பிறர் எமக்கு பெற்றுத்தந்த
துயரங்கள், தீமைகள்
சுகப்பிரசவமாய் மாறும்.

மரங்கொத்தி பறவையாய்
மனம் தூக்கம் தேடி அலையும்
பிறரின் மரணங்கள் கண்டு
மரண பயம்
தொற்றிக் கொள்ளும் நாளும்.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியில்லா ஓடம்

இலைக்கூடுகளில்
ஊர்ந்து செல்லும்
மயிர்க் கொட்டியாய்
நினைவுகளோடு வாழுகின்றேன்.

நினைவோடையில்
மிதந்துவரும் தாமரையாய்
இடங்களை நகர்த்துகிறேன்.

கவிதைகளில்
சிக்கித் தவிக்கும்
சொற்கூட்டங்களாய்
கடந்து செல்லுகின்றேன்.

குச்சியை கௌவிச் செல்லும்
சிறுபறவையாய்
கடல் நீரில் இளைப்பாறுகின்றேன்.

கரையை தொட்டுவிடும்
எண்ணத்தோடு
தன்நம்பிக்கை பிறப்பெடுக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவிசைப்படகில்
பயணம் செய்ய ஆசைப்படுகிறேன்.

நதியில்லா ஓடம்
என் கண்முன்னே
மறைந்து மறைந்து போகிறது.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றம்

இறக்கைகளை கிழித்து
நகக் கண்களை துண்டாக்கி
மலை முகடுகளில்
மறைந்து வாழும் கழுகாய்
என் பழைய வாழ்வை நினைவை
துடைத்தெறிந்து விட்டேன்.

கைகளால் துழாவி
போர்வைகளை வீசி எறிந்து
புதிய சிந்தனைகளை
மனதில் சுமந்து கொண்டு
கொடிய காற்றிற்கும்
ஊழிக்காலத்தீக்கும்
கொல்லும் வேங்கைக்கும்
கூனிக்குறுகி வாழ்ந்த காலம்.

நச்சு வார்த்தைகளுக்கும்
நயவஞ்சக மனித ஜந்துக்களுக்கும்
தீப்பந்தமென எழுந்து
சுட்டெரிக்க தொடங்கியது மனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைகளுக்கும் நாளைகளுக்கும்
இடைநடுவே
நிட்சயமற்ற மனப்பறவை
இன்றுகளை மட்டும் சிந்திக்கும்.

நீட்சிப் பறவையாய்
அந்தகார இருளைக்கிழித்து
மாற்றத்திற்காய்
புறப்பட்டுவிட்டேன்.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்திநேரம்

குதிரைத் தேர்களில்
சுற்றிச் சுற்றி களைத்த சூரியன்
வெப்பக் கதிர்களை வீசி
பூமிப்பந்தை சூடாக்கி
தானும் சூடாகிய நேரம்
குருட்டு இரவை
வரவழைப்பதற்காய்
நீரில் மூழ்கி குளிர்மை பெறும்.

வானவெளியில்
அவசர அவசரமாய்
வேடந்தாங்கலை நோக்கி
பறவைச் சிறகுகள்
மலையிடுக்குகளில்
விரிந்து செல்லும்.

வானக் குளத்தின் நடுவாய்
மேகப் போர்வையை விலக்கி
இதய நிலா
முகம் காட்டிச் சிரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்மினிப் பூச்சிகளாய்
நட்சத்திரப் பூக்கள்
கண்திறந்தே கதை சொல்லும்.
விண்ணிலிருந்தாலும்
மண்ணை நோக்கியவாறு
எரி நட்சத்திரங்களாய்
பட்டாசு மழைபொழியும்
இருளைப் பிரசவமாக்கி
பூமி மகள்
போர்வை விலக்கி
துயில் கொள்வாள்.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகம்

மேகக் கூட்டங்கள்
நாணமற்றதாய்
மலை இடுக்குகளில்
முத்தம் தந்து செல்லும்
ஏழ்மை ரோஜாக்கள்.

பூமித் தோலுக்கு
நிறமூட்டிச் செல்லும்
வறுமைக் கூடாரங்களை
உயர்த்தியபடியே
வறுமை முகங்கள்
சோபை இழந்து நிற்கும்.
ஐயோ ஐயோ
இத்தேசத்தின் இதயங்களுக்காய்
கண்களும், காதுகளும்
எப்பொழுதும் திறக்கும்.

பசபசப்பு வார்த்தைகளுக்காய்
ஆச்சரியக் குறிகளாய்
மானுடம் கூனிக் குறுகிநிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கத் துடிக்கும்
வெறும் மானுடப் பிண்டங்கள்
வயிற்றுப் பிழைப்பிற்காய்
போராடிப் போராடி(த்)
தோற்றுப் போய்
தேயிலை செடிகளுக்காய்
உரமாகிப் போகும்.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

ஒரு மனிதனின்
மாற்றுச் சுவாசம்.

சிரிப்பும் கண்ணீரும்
உயிரில் வரும் சலனம்
துன்பம் கண்டால்
உருகிப் போகும் பனிப்பாறை.

கண்களில் ஊற்றெடுத்து
இதயத்திவ் முடிவது
ஊமைகளின் ஆத்மார்ந்த இராகம்.

படிக்கும் தோறும்
ஊற்றெடுக்கும் பிரவாகம்.

சொற்களை வடித்து வடித்து
செதுக்கி வரும் சிற்பம்.

மனிதம் நலிவடையும் போது
பிறப்பெடுக்கும் புதுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி தெரியதவர்களும்
அமர்ந்து கொள்ளும்
சிங்காரச் சிம்மாசனம்.

தென்றலில் அசைந்துவரும்
சித்திரத்தேர்.

பறவைகள் முட்டிக் கொள்ளும்
அன்பு முத்தம்.

இதய ஜன்னல்களின்
திறவு கோல்.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயம்வரம்

கண்களிலே பிரிவை
அருவியாய் சிந்திக் கொண்டு
வானத்தில் நின்றபடி
வாடி நிற்கிறாளே ஒருத்தி
நினைவிருக்கிறதா?

பறந்து பறந்து வந்திருந்தால்
வனமெல்லாம் தீப்பாறையாய்
குளம்புகளை அள்ளி வீசியிருக்கும்.

சுயம்வரத்தில் தேடிய
மன்னவனை
தொலைத்து வந்திருக்கிறாள்.

வருகிறாள்
காலடியும் மாலையும் பார்த்து
கணவனைத் தேடியவள்.

அன்னம் சிந்திய வார்த்தைகளுக்காய்
உணர்வு பொங்க
உற்சாகம் பெற்றவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு மறந்து போன
நளனின் மனைவியல்லவா?

அன்னப் பெடைகள்
வரிசை வரிசையாய்
நடைப் பயிற்சி பெற்றுக் கொள்ள
போதனை செய்தவளல்லவா?

அந்தப்புரத்தல் இருந்தவளுக்கு
வாழ்க்கைப் பாடம்
தெரிந்திருக்க நியாயமில்லை
கண்களை உடைத்துக் கொண்டு
கண்ணீர் சிந்த வருகிறாள்.

கோழிக்குலமெல்லாம்
சிறகுதட்டி சிறகுதட்டி
அழுகின்றன
உதடுகளைக் கிழித்துக் கொண்டு
வார்த்தைகள் வரமறுக்கின்றன.

சுயம்வரத்திற்காய்
அவள் வரவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் கணவனை
பிரிந்து வந்திருக்கிறாள்
நளனின் மனைவியல்லவா?

பஞ்சணை மெத்தையில்
படுத்துறங்கியவளுக்கு
சூனியத்தில் சுற்றிக் கொண்டிருக்கும்
வனாந்தரம்
எப்படிப் புரிந்திருக்கும்.

மெல்ல மெல்ல இருள்
போர்வைக்குள்
அப்பிக் கொண்டு வருகிறது.

நளன் நினைத்ததுமில்லை
மறந்து போனதும் இல்லை
விதி அவன் வாழ்வில்
விளையாடிச் செல்கிறது.

தன்னையே மறந்து போனவன்
தமயந்தியை நினைக்க
எப்படி முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரோட்டியாய்
தேசம் கலங்க(ப்)
பணிபுரிகிறான்.

இரண்டாம் சுயம்வரத்தில்
உண்மை புலப்படப் போகிறது.

ஒத்த மனங்கள்
மீளுருப் பெறுகின்றன
வேசம் முட்டைக் குஞ்சாய்
புறப்பட்டுப் போகிறது.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியல்

தொழில் உலகில்
மானுட இயந்திரங்கள்
உழைப்பையும் உதிரத்தையும்
உற்பத்தி செய்கின்றன.
வளம் கொழிக்க
நாட்டை உருவாக்கியவர்கள்
உழைப்பை மட்டும்
பத்திரமாய் தந்துவிட்டு...
வறுமையை மட்டும்
தமக்காய்சேமித்துக் கொள்கிறார்கள்.
சம்பள உயர்விற்காய்
போராடிப் போராடி
வெறும் கைகளோடும்
நிறைவேறாக் கனவுகளோடும்
கலைந்து போகிறார்கள்.
மாற்றம் வேண்டி
மாறி மாறி
ஏமாற்றப்படுகிறார்கள்.
குருதி மலைகளில் ஏறிநின்று
விடியலுக்காய்
காத்திருக்கிறார்கள்
நம்பிக்கை இழக்காமல்.
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றம்

சிறகசைந்து வலம் வரும்
சிட்டுக் குருவிகள்
அன்று போல் இன்றில்லை.

மழைக் காலத்தில் ஓலமிடும்
தவளைகள்
மௌனப்பாட்டு பாடும்
வேலிகளில் இருந்தபடியே
சீராய் தலையாட்டி
நிறம் மாற்றும் ஓணான்கள்
தெரியாமலே மறைந்து போயின.

மரபுகள் மறைந்து போய்
அர்த்தமில்லா கொண்டாட்டங்கள்.
ஒற்றுமை புதைந்துபோய்
வெறுப்பும் வேடிக்கையும்.

துயர்துடைத்த கைகள்
அசுரக் கரங்களாய் மாறும்
வாழைச் சருகுகளாய்
மனித இறக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்து சின்னாபின்னமாகும்
சுயநலப் பேயாய் மனம்.

குறுகுறுத்துத் துடிக்கும்
வசந்த காலக் குயில்களின்
கூவல்கள் அடங்கிப் போய்
ஊமைக் கானங்கள்.

**2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய வதனம்

மேகம் மோதி
மின்னல் பூக்கும்
இதமாய் பொழியும்
உன் இனியவதனம்
என் தேகமோ
சிறு குழந்தையாய்...

மண்ணில் விழும்
சிறு தூறலுக்காய் காத்திருக்கிறேன்.
என் பார்வை பட்டுத் தேகத்தில்
பட்டுத் தெறிக்கும்
நானே உன்னைப் பார்க்கிறேன்.

நீயோ
உலகை மறந்து
மண்ணை மட்டும் பார்க்கிறாய்.
ஏனென்றால்
என்னை மண்ணில்
புதைத்து விட்டு
நிம்மதியாய்
வாழ்வதற்கா?

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி

பொதிகையில் பிறப்பு
பொங்கிவரும் எரிமலையின் ஒளி
நரம்புகளில் பட்டுத் தெறிக்கும்.

சிரிக்கும் சிந்தனைகளின்
சிலிர்ந்து போகும் உள்ளம்.

சிவக்கும் இதயத்தில் சீறும்
பறந்து வரும் வல்லூறுகளை
எதிர்த்து நிற்கும் ராஜாளி.

நிலவொளியில் பூத்திருக்கும்
வெள்ளையாய் முல்லை
தலைநிமிர குளிர்ந்து வரும் மொழி.

சந்தனக் குளிரோடை
சலசலத்து வரும் மெல்லிசை
"அ" தொடங்கி அரிச்சுவடி
வந்தாரை வரவேற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திமொழி
எந்த நீரோடையிலும்
எதிர்நீச்சல் போடும்
சொல்லுக்கு பஞ்சமில்லாத
காண்போரை மகிழ்விக்கும்
பொன்மொழி.

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

எப்போதோ ஒரு தடவை
நடந்தவற்றிற்காய்
அதிசயமாய்
முகம் பாறையாய் இறுகி
ஒதுங்கச் சொல்கிறது.
பழங்காலத்து விரோதம்
இருந்த போதும்
சிரிக்க சிரிக்க நினைத்து
தோற்றுக் கொண்டிருக்கிறேன்.
நீயும் எதிர்பாராமல்
தோற்றுப் போனாய்
எப்படியிருந்தும்
மலர்ந்து பிறப்பெடுக்கும்
புதிய நட்பை
தெரிந்தோ தெரியாமலோ
புதை குழியில்
புதைத்துக் கொண்டிருக்கிறோம்.
நட்பின் மகிமை
தெரியாதவர்களாய்
மீண்டும் தோண்டி எடுத்து
சொந்தம் கொண்டாடவா முடியும்?

**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயம்

கனவில் வந்த
கொடிய இரவுகள்
கைகளால் இருளை
விரட்டியபடியே
பயணம் செய்கின்றேன்.

கொடிய மலைக்காடுகள்
அதனிடையே அழகிய மரம்
பரந்து கிடக்கும் வானக்கடல்
அந்த மரத்தைச் சுற்றியபடி
கருநாகம் காவல் செய்கிறது.

என்ன அதிசயம்
ஆதாமும் ஏவாளும்
வழமை போலவே
காட்சி தந்தார்கள்
ஆதாமின் கைகளில்.

அழகிய பழங்கள்
பயமும் குளிரும்
என்னைப் பற்றிக் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளால் என்போர்வையை
இழுத்து உடலை மூடிக் கொள்கிறேன்.
காதலையும் அவர்களையும்
கண்டு பிடிப்பதில்
பெரும் கஷ்டமிருக்கவில்லை
மனதிலே காம உணர்வுகள்
தோன்றவில்லை.

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரங்கள்

சோகத்தைச் சொல்லும்
கவிதைகளும், பாடல்களும்
என்னை கவர்ந்திருக்கின்றன.
இன்பத் தேனிலும்
துன்பக் கசப்புக்களை
உள்ளங் கைகளால் வாங்கி
புறங்கையால் வழிய வழிய
நக்கிச் சுவைப்பது சுகமானது.
ஏனெனில்
அதுவும் இனிமைதான்.

துயரங்கள் தானாய் வருபவை
முட்களாய் மாறி கீறிவிடும்
சில துயரங்கள்
சிலுவை ஆணிகளாய்
அடிக்கப்பட்டு விடுவதுண்டு.
ஒருவன் தரும் இன்பங்களை
மெதுவாக வாங்கிக் கொள்வதை விட
ஒருவனின் துயரங்களை
முழுமையாய் வாங்கிக் கொண்டு
அவனுக்காக அழுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை இன்பமானது
இன்பங்களைத் தேடும் மனிதன்
உலகில் தனித்து விடப்பட்டு
தோற்றுப் போகிறான்
துன்பங்கள் தாங்கியவன்
செதுக்கிய சிற்பமாய்
மிளிர்ந்து கொள்கிறான்.

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மை

எந்தப் கருவிகளாலும்
அளந்து கொள்ள முடியாது
அன்பு ஓவியம்
நாம் சிறகு விரித்துப் பறக்க
வானமானவள்
ஆழ்த்தூங்கும் குழந்தையை
அரவணைத்து தலைதடவும் சிற்பம்

தன் வாழ்வு சருகாய்
உதிர்ந்து போனாலும்
வறுமை வந்து
இழுத்துச் சென்றாலும்
தலைதடவி உணவூட்டி
அகமகிழும் தேவதை

தாய்ப்பாலூட்டி
வார்த்துத் தந்த வெண்மைவாசம்
பட்டென மொட்டு வெடிக்கும்
வெண்மைப் பூக்கள்
சிரிப்பாய் உதிர்ந்து போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயம் சிவப்பானது
தாய்மையின் உணர்வுகள்
பகிர்தலில் நிறமற்றவை
இதயச் சிறகினுள்ளே
பத்துமாதம் பக்குவமாய்ப் பூட்டி
பாதுகாத்து
புதுவரவாய்
பூமித் தரையிலே
பக்குவமாய் உலவ விட்டவள்
படைப்புக் கடவுளின்
உன்னதமான படைப்பு.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனப்பெட்டகம்

கனவுகள் பலித்தன
மனப் பெட்டகத்தில்
பூட்டி வைத்தவை எல்லாம்
தூசு தட்டப்பட்டு
நினைவுகளாய் மீண்டன.

தேவபாலனை
துடிக்கத்துடிக்க(ச்)
சிலுவையிலே அறைந்தார்கள்.

மகாத்மாவினை நோக்கி
அகிம்சை பற்றி
கேள்வி கேட்டு கேட்டு
துளைத்தெடுத்தார்கள்.

உச்சி வெயிலின் வேளை
விறகு சுமந்து செல்லும்
பச்சையம் இல்லாத குமரியின்
இளைத்த உடலைப் பற்றி
பாகம் பாகமாய (ப்)
பிரித்து போட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளால் வறுத்தார்கள்.
பாலுக்கு அழும் குழந்தையை
எவருமே கணக்கெடுக்கவில்லை.
தத்தமது கருமங்களில்
கண்ணாய் இருந்தார்கள்.
கண்ணீரையும் செந்நீரையும்
யாருமே கண்டுகொள்ளவில்லை.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்கள்

மரங்கள் இலை விரல்களை
ஒன்றோடொன்று உரசுகின்றன.

மெல்லிய ஒலிகள்
பிறப்பெடுத்துக் கொள்கின்றன.
மனிதர்களுக்காய் மரங்கள்
குடை விரித்து நிழல் தருகின்றன.
வெயில் அரக்கனை
இறுக அணைத்துக் கொண்டு
உடலுறுப்புகளை
தினம் தினம் தானம் செய்து
காய்ந்து போகின்றன.
இசை பிறக்கும்போது மரங்கள்
அசைந்து ஆடுகின்றன.
வருடா வருடம்
காற்றை வடிகட்டுகின்றன.
பூக்களைக் கருவாக்கி
காய்களை(ப்) பிரசவம் செய்கின்றன.
கற்பைக் காக்க எண்ணி
மண்ணறைகளில் மறைந்து கொள்ளுகின்றன.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக்காலம்

இரவு மணி எத்தனை
என்பது தெரியவில்லை.
என்னை
இழுத்து அரவணைத்தது.

மேற்புகை ஒட்டத்தில்
தூக்கி வீசப்பட்ட
பனையான் மீனாய்
மல்லாந்தபடி கிடக்கிறேன்.

எங்கள் வீட்டுக் கூரை
வீணையாய் அதிர்கின்றது.
கிடுகுகளுக்கிடையே
மின்மினியாய் மின்னல்
பட்டுத்தெறிக்கிறது.

என் தலைக்கு மேலே
காற்றில் உதிரும் சருகுகளாய்
துப்பாக்கியிலிருந்து பிறக்கும்
இரும்பு சன்னங்களாய்..
மழைத்துளிகள்
சிந்திச் சிதறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடித்தடங்கள்
யாருடையவை
இனம் கண்டு கொண்டேன்.

ஒழுகும் கூரை நீரை பக்குவமாய்
எனது தாய்
பாத்திரங்களில்
வாங்கிக்கொண்டிருந்தாள்..

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிகைகள்

இரவுகளை நீட்டிவிட்டு
தூக்கத்தை விரட்டி சூடி
மணிமுடி சூடும் பண்டிகை.

குழந்தைகள் முதுமை அடைய
முதியவர் குழந்தையாய் மாறும்
அற்புதமான விசித்திரம்.

பட்டாசுச் சத்தம் வானைப்
பிளந்து நிற்க,
ஏழையின் சிரிப்பிலே
புதுமைகள் பிறக்கும்.
ஊரெல்லாம்
கொடியேற்றிக் கொண்டே
குதூகலம் பிறக்கும்.

மதங்கள் யாவும் மறந்து போகும்
சொந்தங்கள் தேடி
உறவுக் கரங்கள்
நீட்சி அடையும்.
சொல்லாமல் வந்த சொந்தங்கள் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென வந்துவிட்ட
திருநாளுக்காய்
தவம் கிடக்கும்.
மரக்கிளைகள்
கைத்தட்டி வரவேற்கும்.
நிலமகளின் மேனியிலே பனித்துளிகள்
பட்டுத் தெறிக்கும்.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கண்கள் மட்டும்

கூட்டம் அலைமோதும் நேரம்
என் கண்கள் மட்டும்
உன்னை தேடுகின்றன.
காற்றுப் புக முடியாத இடம்
ஒளிச் சூரியனும்-
கூனிக்குறுகி நிற்க,
என்னை மீட்க முடியாதபடி
அடகு பொருளாக
அடங்கி நிற்கிறேன்.
பாலைவனத்து(ப்)
பாம்புகள் போல்
என் பேனா மட்டும்
வளைந்து நெளிக்கிறது.
உன்னை அடையாளம்
கண்ட பின்னர்தான்
நான் சுவாசிக்க(க்)
கற்றுக் கொள்கிறேன்.
என் உள்ளப் பாலைவனத்தில்
நம்பிக்கைப் பூக்கள் மலர்ந்து
வாசம் செய்கின்றன
இதுபற்றி உனக்கு(த்)
தெரிந்திருக்க நியாயமில்லை.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு

இந்தப் பூமியில்
உன் கைகளுக்குள்
என் பிறப்பு உதயமானது.

கடவுள் மீண்டும்
அழைத்து விடுவாரோ
என்ற பயம்
உன் மனதில் தொற்றிக்கொண்டது.

பிரசவம் நல்லபடி
அமைய வேண்டும் என்பதற்காய்
அனைவரும் காத்துக்கொண்டிருந்தனர்.

என்னை அதிசயப் பொருளாய்
அனைவரும் எண்ணிக்கொண்டனர்.

ஆணா?" பெண்ணா?
என்பதை அறிந்து கொள்வதில்
குறியாய் இருந்தனர்.
முதல் அழுகைச்
சத்தம் கேட்ட பின்னர்
குறையேதுமில்லை

என்பதில் இலேசான திருப்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சி புழுக்கள்
என்ன நெருங்காமல்
நீ பார்த்துக் கொண்டாய்.
விதைப்பின் அறுவடை
நான் என்பதை
பெருமிதமாய் பிதற்றிக் கொண்டாய்.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணறைகளில்

மனித வாழ்க்கை
மகத்துவம் நிறைந்தது
அதிலும் நீண்ட ஆயுளோடு
வாழ்வதையே
மதங்கள் விரும்பி நிற்கின்றன.
மனித உயிரை
பறித்தெடுப்பதற்காய்
எவருக்கும்
அனுமதி இல்லை-
ஊடாடித் திரிய வேண்டி மனிதம்.

மண்ணறைகளில்
வெற்று எலும்புக் கூடாய்
புதைந்து போய் கிடக்கும்.
தோண்டத் தோண்ட
மண்ணில் ஆழத்திலிருந்து
வெப்பக்காற்றினை கொண்டு வரும்.

நவமணிகளாய்
பிணைக்கப்பட்டவைகளாய்
அடையாளம் தெரியாமல்
அடங்கிப்போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்புக்கூடுகள்-
ஆய்வாளர்களின் கைவிரல்களில்
எப்போது புதைந்தார்கள்
ஏன் புதைந்து போனார்கள்
என்பவை வினாக்குறிகளாய்
விடை தெரியாமல்
கண் முன்னே விரிந்திருக்கும்.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன அதியசம்

அன்றைய நாட்களில்
அனேக வீடுகள்
ஓலைகளால் அமைந்திருந்தன.

ஊர் உறவுக்கெல்லாம்
நிறைந்த மகிழ்ச்சி
இதயத்தின் நான்கறைகளிலும்
உணர்ச்சிப் பிரவாகம்
கூரையில் அமர்ந்தபடி
உறவுக் கயிறுகளால்
கிடுகுகள் கட்டினோம்.

இது ஊர் முழுவதுமாய்
மாறி மாறி பிறப்பெடுக்கும்.
எங்கள் வீடுகள்
அழகிய கூரைகளாய் மாறின.

கிடுகுகளுக்கு வேலையில்லாமல் போனது.
என்ன அதிசயம்
எங்கும் இவை பற்றிப்
பிரஸ்தாபித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு வீட்டையும்
எப்படி மண்ணில் புதைப்பது
பற்றியே பேச்சு நடந்தது.
மனித நாகரிகத்தின்
வளர்ச்சியை
எம்மால் எப்படி தடுக்க முடியும்
மானுடம் உயிர் பெற்றது
நாம் செய்த தவறா?

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால ஸ்ரீலங்கா

விண்வெளியாய்
வீதிகள் நீண்டிருக்கும்
விபத்துக்களால்
பிணங்கள் மலிந்திருக்கும்.

வானும் கடலும்
ஒன்றாய் உறவாடி நிற்கும்.
சுயநல மானுடக் கூட்டம்
பதவிகளுக்காய்
பாய் விரித்து காத்திருக்கும்.

ஆயுதங்கள் மௌனித்திருக்கும்.

பீதி, புழுதி அடங்கி
புன்னகை பிறப்பெடுக்கும்.
செல்லுமிடங்களில் படுத்துறங்க
பச்சைப் புல் மெத்தை விரிக்கும்.

ஆணுக்குப் பெண் சமம் என்று
சட்டம் பிறந்திருக்கும்.
வீதிகளெல்லாம்
போதிமரங்கள் முளைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகள் இல்லாத
கூடுகள் நிறைந்திருக்கும்.
போதையாய் மக்கள்
ஊர்ந்து திரிவார்கள்.
வேற்றுமொழி பேசும் கூட்டம்
வாழ்விடங்களில் வசிக்கும்.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனகசூரியம் யோகானந்தன்

கவிஞர் க.யோகானந்தன் அவர்கள் திருகோணமலை மாவட்டம் சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திருகோணமலையில் வசித்து வருகிறார் பாடசாலை அதிபராக கடமை புரிந்து வருகின்ற போதும் இலக்கிய உணர்வு நிரம்பப் பெற்றவர் பல மேடைகள் கண்ட அரங்க கவி. பாடசாலைகள் நிறுவனங்களுக்கு கீதம் இயற்றிய பெருமைக்குரியவர். திருமலை உறையும் எனத் தொடங்கும் பாடலுக்குச் சொந்தக்காரர். மண்வாசனை சமூக சீர்திருத்தம் போர்க்காலச் சூழல் போன்ற கவிப் பதிவுகளின் சிற்பி என பல பரிமாணங்கள் கொண்ட கவிஞரின் நதியில்லா ஓடம் என்னும் இக்கவிதை நூல் இவருடைய நான்காவது படைப்பாகும்.

2006இல் உண்மை என்றும் உயிர்பெறும் என்னும் கவிதை நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை இவரது கவிதை ஆளுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. திருகோணமலையில் நடைபெறுகின்ற தமிழ் இலக்கிய நிகழ்வுகள் பலவற்றிலும் தனது பங்களிப்பினை வழங்கி இலக்கிய பணியாற்றிக் கொண்டிருப்பவர். இவர் மேலும் பல நூல்களை ஆக்கி தமிழ் கூறும் நல்லுலகிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என மனதார இவரை வாழ்த்துகிறேன்.

-டாக்டர் அ.சதீஷ்குமார்

ISBN : 978-855-0328-01-7

**நர்த்தனா வெளியீட்டகம்**

இல 101/ 8, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

Rs. 300/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org